## ஹோமியோபதி வைத்திய சபை - 2018

ஹோமியோபதி வைத்திய சபையின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாடுகள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.1 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு ஒவ்வொரு நிறுவனமும் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும். அவ் அதிகாரச்சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்தினதும் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளுடன் சேர்த்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ் அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் வருடாந்த அறிக்கைகள் மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் உரிய நேரத்தில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய வருடாந்த அறிக்கைகள் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

### 1.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2016 இன் 10 ஆம் இலக்க ஹோமியோபதி வைத்திய சபை அதிகாரச்சட்டம் | | | |
| (i) 28(6) ஆம் பிரிவு | பதிவை புதுப்பிப்பதற்காக பணம் செலுத்தியிருந்த மற்றும் பணம் செலுத்தியிருக்காத மருத்துவ உத்தியோகத்தர்களை தனித்தனியாக இனங்காணக்கூடியவாறும் நிலுவைக் கட்டணம் மற்றும் வருடாந்தம் | ஹோமியோபதி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் மருத்துவ உத்தியோகத்தர்களை பதிவு செய்வதற்கான பிரமாணங்கள் சபையால் தயாரிக்கப்பட்டு சட்ட வரைஞரிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந் | வர்த்தமானியில் புதிய பிரமாணங்கள் தயாரிக்கப்பட்டு பிரசுரிக்கப்படும் வரை ஏற்கனவேயுள்ள பிரமாணங்களின் பிரகாரம் மருத்துவ உத்தியோகத்தர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பதிவை புதுப்பிக்கின்றமையை சரிபார்க்கக்கூடியவாறும் ஹோமியோபதி மருத்துவ உத்தியோகத்தர்களை பதிவுசெய்யும் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | த போதிலும் இது நாளதுவரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்காததன் விளைவாக இப் பதிவேட்டை நாளதுவரையாக்க முடியாதிருந்தது. | கள் பதிவு செய்யப்பட வேண்டும். அதற்கிணங்க மருத்துவ உத்தியோகத்தர்களை பதிவு செய்யும் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டு பேணப்பட வேண்டும். |
| (ii) | 51(1) மற்றும் 51(2) ஆம் பிரிவுகள் | புதிய மருத்துவ சபை நியமனம் செய்யப்படும் வரை சபையின் தொழிற்பாடுகளை ஆற்றுவதற்காக அமைச்சரால் நியமனம் செய்யப்பட்ட இடைக்கால மருத்துவ சபையின் காலம் 2018 ஒக்தோபர் 19 இல் காலாவதியாகியிருந்த போதிலும் புதிய மருத்துவ சபை 2019 செப்தெம்பர் 10 வரையிலும் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | மருத்துவ சபையின் நியமனத்திற்கான பிரமாணங்கள் சட்ட வரைஞரிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்காதமை மற்றும் மருத்துவ சபையை தேர்ந்தெடுப்பதற்கு வாக்களிக்கக்கூடிய மருத்துவ உத்தியோகத்தர்களை பதிவு செய்வது தொடர்பான மேன்முறையீட்டின் நீதிமன்றத் தீர்ப்பின் ஊடாக சிக்கல் ஏற்பட்டிருந்தமை என்பன அந் நிலைமைக்கான காரணமாகும். | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் புதிய மருத்துவ சபையின் நியமனம் துரிதப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் நிதிப்பிரமாணம் 133 | சபைக்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டிற்காக சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினாலும் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு 2019 ஆம் ஆண்டிலிருந்து உள்ளகக் கணக்காய்வினை மேற்கொள்ளும். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நடாத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 16.1 ஆம் பிரிவு | 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 7 மருந்துக் கலவையாளர்கள் மற்றும் 7 மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகள் 2019 செப்தெம்பர் 10 வரையிலும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | பாடத்திட்டங்களை இனங்காணுதல் மற்றும் பதவியணியினரின் பற்றாக்குறை காரணமாக வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகளை நடாத்துதல் தாமதமாகியிருந்ததுடன் பாடத்திட்டங்கள் மற்றும் மாதிரி வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டு சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் பரீட்சைகள் பிரிவால் பரீட்சைகள் நடாத்தப்படுவதற்கு அமைச்சிற்கு அனுப்பப்பட்டிருந்த. | வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | 2014 ஆகஸ்ட் 13 ஆந் திகதிய பிஈடி 25(2) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அரச வங்கியொன்றில் பேணப்படுகின்ற கணக்கொன்றில் பணம் வைப்பில் இடப்பட வேண்டிய போதிலும் 2009 ஆம் ஆண்டில் அறவிடப்பட்ட பரீட்சைக் கட்டணங்கள் தனியார் வங்கியொன்றின் சேமிப்புக் கணக்கில் வைப்பிலிடப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அக் கணக்கின் மீதி ரூபா 1,787,552 தொகையாகும். | தனியார் வங்கியின் சேமிப்புக் கணக்கில் வைப்பிலிடப்பட்ட பணத்தை அரச வங்கியொன்றின் நிலையான வைப்புக் கணக்கில் வைப்பிலிடப்படுவதற்கு அமைச்சிடம் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது ஹோமியோபதி மருந்து கலவையாளர்களை பயிற்றுவித்து மதிப்பீடு செய்து சான்றிதழ்களை வழங்குவதற்கும் ஹோமியோபதி மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்களை (Cosmetics) இறக்குமதி செய்து விற்பனை செய்தல் மற்றும் தயாரித்தல் தொடர்பான பிரமாணங்களை பிரசுரிப்பதற்கும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அத்தகைய நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அந் நடவடிக்கைகளின் செயன்முன்னேற்றம் 2019 செப்தெம்பர் 10 வரையிலும் காணப்பட்டிருக்கவில்லை. | மருந்து கலவையாளர் பதவிக்காக தேசிய தொழில்சார் தகமை கற்கைநெறியொன்றை தயாரிப்பதற்கு உரிய நிறுவனங்களுடன் பணியாற்றப்பட்டிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டின் இறுதி வரை அச் செயற்பாட்டை அடைந்துகொள்ள முடியாதிருந்ததால் இந் நிலைமை ஏற்பட்டுள்ளது. | நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக ஹோமியோபதி மருத்துவ சபை அதிகாரச்சட்டம் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | ஹோமியோபதி அதிகாரச்சட்டத்தின் 30(1) ஆம் பிரிவின் பிரகாரம் 5 ஆண்டுகளிற்கு மேலாக ஹோமியோபதி மருத்துவத்தை மேற்கொள்ளுகின்ற மருத்துவ உத்தியோகத்தர்கள் மருத்துவ சபையால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் ஹோமியோபதி மருத்துவ உத்தியோகத்தர்களாக பதிவு செய்யப்பட வேண்டும். மீளாய்வாண்டின் போது பரீட்சைக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்ததுடன் 189 விண்ணபங்கள் பெறப்பட்டிருந்தன. நடாத்தப்படுகின்ற பரீட்சைகளிற்கான பிரமாணங்களின் தொகுப்பு பூர்த்தி செய்யப்படாததன் காரணமாக பரீட்சைகளை நடாத்தி மருத்துவ உத்தியோகத்தர்களை பதிவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட முடியாதிருந்ததுடன் உச்ச நீதிமன்றத்தில் நடைபெறுகின்ற வழக்கு ஒன்று காணப்படுகின்றது. | பிரமாணங்களை தயாரிப்பது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பிற்கு எதிராக தொடரப்பட்டிருந்த உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு பெறப்படும் வரை இதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. தற்போது பின்பற்றப்பட வேண்டிய படிமுறைகளிற்காக சட்டமா அதிபரிடம் அறிவுறுத்தல்கள் கோரப்பட்டுள்ளன. | சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சிசிச்சை நிலையங்களிற்கு வருகின்ற நோயாளர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பீடு செய்து தேவைப்பாடு இனங்காணப்படாமல் ஹோமியோபதி சிசிச்சை நிலையங்களிற்கு மருந்து கொள்கலன்களிற்காக பயன்படுத்தப்படுகின்ற பிளாஸ்ரிக் டிப்கள் (Dips) மற்றும் காகிதப் பைகள் வழங்கப்பட்டிருந்தன. 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,070,487 பெறுமதியான 373,752 சிறிய மற்றும் நடுத்தரளவிலான டிப்கள் மற்றும் 392,389 பைகள் என்பன மருத்துவ சபை அலுவலகம் மற்றும் சிசிச்சை நிலையங்களில் காணப்பட்டதுடன் அப் பொருட்கள் அழிவடையும் அல்லது காலவதியாகும் ஆபத்தில் உள்ளது. அவ் இருப்புக்கள் தொடர்பாக பேரேட்டுக் கணக்குகளும் பேணப்பட்டிருக்கவில்லை. | நாடு முழுவதும் 07 ஹோமியோபதி சிசிச்சை நிலையங்கள் காணப்படுகின்றன. மருந்து கொள்கலன் பைகள் மற்றும் டிப்கள் என்பன காலத்திற்கு காலம் வழங்கப்படுவதற்குப் பதிலாக மருத்துவ உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட்ட மதிப்பீடுகளை கருத்தில் கொண்டு அவை சிசிச்சை நிலையங்களிற்கு வழங்கப்பட்டிருந்தன. சபை அலுவலகம் மற்றும் சிசிச்சை நிலையங்களில் பைகள் மற்றும் டிப்கள் காணப்பட்ட போதிலும் சபை 2019 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்டிருந்தன. | அத்தகைய பிளாஸ்ரிக் டிப்கள் மற்றும் பைகள் தொடர்பாக பேரேட்டுக் கணக்குகள் பேணப்பட வேண்டும். முறையான இருப்புக் கட்டுப்பாடு பேணப்பட வேண்டும். |

## 2.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் பேணப்படுகின்ற 7 சிசிச்சை நிலையங்களில் 6 சிசிச்சை நிலையங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நோளாயாளர்களின் மொத்த பங்குபற்றல் 10 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டில் ஒரு சிசிச்சை நிலையத்திலுள்ள நோயாளர்களின் பங்குபற்றல் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டின் போது அவ் வீழ்ச்சி 29 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. | 2017 ஆம் ஆண்டில் பாலமுனை ஹோமியோபதி சிசிச்சை நிலையத்தில் கொள்ளைக்காரர்களின் தாக்குதலொன்று காணப்பட்டதுடன் பல கருவிகள் சேதமடைந்திருந்ததால் நோயாளர் பங்குபற்றுவதில் தயக்கம் காட்டியிருந்தனர். | நோயாளர்களின் பங்குபற்றுதலை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஹோமியோபதி மருத்துவ பாடசாலையொன்றை ஆரம்பிப்பதற்காக 2008 ஆம் ஆண்டில் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் 2009 ஆம் ஆண்டில் தளபாடங்களும் பொருத்துக்களும் வழங்கப்பட்டிருந்தன. உரிய சட்ட கட்டமைப்பு தயாரிக்கப்பட்டிருக்காததன் காரணமாக 2019 செப்தெம்பர் 10 வரையிலும் கல்விசார் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. ரூபா 1,199,254 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களும் கட்டிடமும் 09 ஆண்டுகளிற்கு மேலாக விளைவற்றிருந்தன. | ஹோமியோபதி மருத்துவ பாடசாலையை ஆரம்பிப்பதற்கான சட்ட நடவடிக்கைகள் மற்றும் பௌதீக நிர்மாணங்கள் தொடர்பாக ஆரம்ப படிமுறைகள் எடுக்கப்பட்டுள்ளன. | கட்டிட நிர்மாணம் மற்றும் உபகரண வழங்கலிற்கு முன்னர் சட்டங்கள் மற்றும் பிரமாணங்களை தொகுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடம் மற்றும் உபகரணங்களை உரிய நோக்கத்திற்கு பயன்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1970 இன் 07 ஆம் இலக்க ஹோமியோபதி அதிகாரச்சட்டத்தின் 20(2) ஆம் பிரிவு மற்றும் 2016 இன் 10 ஆம் இலக்க புதிய ஹோமியோபதி அதிகாரச்சட்டத்தின் 18(1)(அ) பிரிவு என்பவற்றின் பிரகாரம் பதிவாளர் பதவி தற்காலிக பதவியொன்றாக உள்ள போதிலும் 2012 ஒக்தோபர் 16 இல் நிரந்தர அடிப்படையில் அப் பதவிக்கு உத்தியோகத்தர் ஒருவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தார். நிரந்தரப் பதிவயொன்றாக அப் பதவியை கருத்திற்கொண்டு தயாரிக்கப்பட்டிருந்த ஆட்சேர்ப்புத் திட்டம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அதிகாரச்சட்டத்திற்கிணங்க ஆட்சேர்ப்புத் திட்டத்தை தயாரித்து அங்கீகாரத்தை பெறுவதற்கும் தேவைப்பாட்டின் பிரகாரம் அதிகாரச்சட்டத்தை | 1970 இன் 07 ஆம் இலக்க ஹோமியோபதி அதிகாரச்சட்டம் நிரந்தர பதவிக்கு பதிவாளர் பதவியை மாற்றுவதை தடுப்பதில்லை. முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் நிரந்தர பதவியணியாக பதிவாளர் உள்ளடங்கிய ஹோமியோபதி மருத்துவ சபையின் பதவியணியினரை அங்கீகரித்திருந்தது. 2016 இன் 10 ஆம் இலக்க ஹோமியோபதி அதிகாரச்சட்டத்தின் 18(1) ஆம் பிரிவில் தற்காலிக பதவியொன்றாக பதிவாளர் பதவி குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதிகாரச்சட்டத்தின் 50(2)(உ) பிரிவின் பிரகாரம் பதவியின் | 2016 இன் 10 ஆம் இலக்க ஹோமியோபதி அதிகாரச்சட்டத்தின் 18(1)(அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஹோமியோபதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளிற்கு இணங்க புதிய ஆட்சேர்ப்புத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். இல்லாவிடில் அதிகாரச்சட்டத்தை திருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| திருத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படடிருக்கவில்லை. மேலும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம் நியமனத் திகதியிலிருந்து 3 ஆண்டுகளினுள் உத்தியோகத்தர் முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தியெய்த வேண்டும். அப் பரீட்சை 2019 செப்தெம்பர் 10 வரையிலும் நடாத்தப்பட்டிருக்காததுடன் நன்நடத்தை காலம் நீடிக்கப்பட வேண்டும். எனினும் அதற்கிணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. உத்தியோகத்தர் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்திருக்காத போதிலும் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு 4 சம்பள ஏற்றங்கள் உத்தியோகத்தரிற்கு வழங்கப்பட்டிருந்தன. | தற்காலிக நிலை தற்போது பதவியில் சேவையாற்றும் உத்தியோகத்தரிற்கு அமுல்படுத்தப்படுவதில்லை. அதிகாரச்சட்டத்தின் தேவையான திருத்தங்களிற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததுடன் இடைக்கால மருத்துவ சபையானது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் அவர் சித்தியெய்தும் வரை தற்போதைய பதிவாளரின் நன்னடத்தைக் காலப்பகுதியை நீடிப்பதற்கு தீர்மானித்திருந்தது. |

## 3. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 3.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 2 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு மற்றும் 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் நியதிச்சட்ட சபைகளின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களினுள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இவ் அறிக்கை திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 3.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஹோமியோபதி மருத்துவ செயன்முறையை மேம்படுத்தி ஒழுங்குபடுத்தி கண்காணித்தல், ஹோமியோபதி மருந்துகள் தொடர்பான ஆராய்ச்சியை மேம்படுத்துதல், மருந்துகளை உற்பத்தி செய்தல் மற்றும் தயாரிப்புக்கள், விற்பனைகள் மற்றும் விநியோகங்களை கண்காணித்து கட்டுப்படுத்துதல் போன்ற பிரதான நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான திட்டங்கள் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளிற்கான மதிப்பிடப்பட்ட கிரயம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஹோமியோபதி மருந்துகள் மற்றும் ஹோமியோபதி மருத்துவச் செயன்முறையை மேம்படுத்தும் நோக்கில் அனைத்து திட்டங்களையும் அமுல்ப்படுத்துவதற்கான மனித மற்றும் நிதி வளங்கள் போதாமல் உள்ளது. எதிர்வரும் ஆண்டுகளில் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | ஹோமியோபதி மருத்துவ சபையின் பிரதான நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக ஒவ்வொரு நடவடிக்கைக்கும் உரிய மதிப்பிடப்பட்ட கிரயத்தை உள்ளடக்கி உண்மையான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |